
# ஈழத்தவர் வரலாறு 22

# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

கி.பி. 436 ஆம் ஆண்டளவில் குளக்கோட்டன் என்னும் மன்னன் கோணேஸ்வரர் ஆலயத்திருப்பணியை நிறைவேற்றி அந்த ஆலயப்பணிவிடைகளை நிறைவேற்றுவதற்கும் கோணேசலிங்கத்திற்கும் பூசனை புரிவிப்பதற்கும் செலவு வரவுகளுக்குமாக ஏழு நாடுகளில் வயல்நிலங்க்ளையும் தோப்புக்களையும் ஏற்படுத்தி அவற்றிற் பயிரிட்டு வருமானம் செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியேற்றித் தன் நாட்டிற்கு மீண்டான் என வைபவமாலை குறிப்பிடுகிறது. அது தொடர்ந்து வன்னியரின் குடியேற்றத்தை பின்வருமாறு கூறுகிறது.

'அந்நாள் முதல் அவ்வருமானங்களால் ஆலயப்பணி விடைகளும் அந்தணர் அக்கிரகாரங்களும் மடங்களும் சப்பிரமமாகச் சிறந்து வந்தன. சிலகாலத்தின் பின் குளக்கோட்டு மகராசன் தேகவியோகமானான். அதன் பின் மேற்கூறிய ஏழு நாடுகளிலும் பயிர்க்குடிகளாக இருந்த வன்னியர்கள் மிகவும் பெருகியிருந்தார்கள். பாண்டி நாட்டிலிருந்த ஐம்பத்தொன்பது வன்னியர்களும் வந்து அவர்களுடன் கூடினார்கள். குடிசனங்கள் வரவரப் பெருகி அதிகப்பட்டுக் கொண்டமையால் அரசாட்சியின்றி வெகுவித கலகங்கள் அதிகப்பட்டுக் கொண்டமையால் அரசா ள பலகால்ம் நேரிட்டன. அவ்வேழு நாடுகளின் வருமானங்களிலும் கோணேசர் கோயிலுக்குச் செல்வனவேயன்றி கண்டி நாட்டரசருக்கு அந்நாடுகளினால் யாதொரு நயமுமில்லாமையாற் கண்டி நாட்டு அரசர்கள் அந்நாடுகளை பராமுகம் பண்ணிவிட்டார்கள். அக்காலத்திலே சந்திரவ்ன்னியனும் வேறு அநேக குறுநில மன்னரும் ஒருவரின் பின்னொருவராக தோன்றியழிந்த பின் அவ்வன்னியர்கள் அனைவரும் ஒத்திணங்கித் தங்கள் சாதியிற்றலைப்பட்ட ஏழு பேரைத் தெரிந்து அவ்வேழு நாடுகளுக்குத் தலைவ்ராக்கி அவர்களுக்கு கீழ் அமைந்திருந்தார்கள். வன்னியர்கள் ஆண்டு வந்ததினால் அவ்வேழு நாடுகளும் வன்னி நாடுகளெனப் பெயர் பெற்றன. அது முதல் அவ்வேழு தலைவரின் சந்ததியார் சுயேற்சைப்படி ஆண்டு வந்தார்கள்.




வன்னியர்களின் இரண்டாவது குடியேற்றம் செயதுங்க வரராசசிங்கள் என்ற மன்னனின் காலத்தில் நிகழ்ந்துள்ளது. யாழ்ப்பாண இராச்சியத்தின் (நாகதீவு) முதன் மன்னனான உக்கிரசிங்கனின் மகன் இவனாவான். உக்கிரசிங்கன் கதிரமலை (கந்தரோடை) யிலிருந்து தலைநகரை பெருநிலத்திலமைந்திருந்த சிங்கை நகருக்கு மாற்றியுள்ளான். இது குறித்து ஏற்கனவே விரிவாக முன்னைய அத்தியாயங்களில் ஆராய்ந்துள்ளோம். அவ்வேளை சிங்கை நகரிலும் அதனைச் சூழ்ந்து பரந்திருந்தவன்னிப் பெரு நிலத்திலும் மக்கள் மிகக் குறைந்த அளவிலும் மிகவரிதாகவும் இருந்துள்ளனர் என ஊகிக்கலாம். நாட்டுக்கும் அரசுக்கும் உரிய மக்கட் தொகை இருக்கவில்லையாதலால், செயதுங்க வரராசசேகரன் வேறிடங்களிலிருந்து வன்னிப்பிரதேசத்தில் குடியேற்றங்களை ஏற்படுத்த எண்ணினான். இம்மன்னனின் காலத்து வன்னிக் குடியேற்றங்களை வையாபாடல் மேல்வருமாறு விபரிக்கின்றது.

''செயதுங்கவரராசசிங்கள் தன் மாமனது மகளைத் தான் மணம் முடிக்க விரும்புவதாக மதுரை மன்னனிடம் அறிவிக்குமாறு தூதுவரை அனுப்பினான். தூதுவர்கள் சொன்னவற்றைக் கேட்ட மதுரை மன்னர் 60 வாட்படை வன்னியரை அழைத்துத் தன் மகள் சமதூதியை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். செயதுங்கவரராசிங்கன் இளவரசியை மணம் முடித்து விட்டு அவளோடு வந்த வன்னியர்களை அடங்காப்பற்றினைச் சென்று ஆளுமாறும் ஆண்டு தோறும் தனக்குத் திறை செலுத்துமாறும் பணித்தான்.

'அடங்காப்பற்றை அடைந்ததும் வன்னியர் அதைக் கைப்பற்றுவதற்குத் தம்மிடம் போதிய படையில்லை என்பதை உணர்ந்தார்கள். எனவே இளஞ்சிங்கமாப்பாணன், நல்லவாகுதேவன்,அத்திமாப்பாணன் என்போரிடம் தூதுவர்களை அனுப்பி மதுரை, மருங்கூர், காரைக்கால், காஞ்சிபுரம்,திருச்சிராப்பள்ளி, துளுவை நாடு, தொண்டை மண்டலம்,, வடகிரி நாடு எனுமிடங்களிலிருந்து கூட்டிவரக்கூடியவர்கள் அனைவரையும் கொண்டு வருமாறு சொல்லியனுப்பினார்கள். இதனை அறிந்ததும் தில்லை மூவாயிரவர், திடவீரசிங்கன், குடை காத்தான், முடிகாத்தான், நல்லவாகு,மலைநாடான், சிங்கவாகு, சோதயன், அங்கசிங்கன், கட்டைக்காலிங்கன், சொக்கநாதன், கங்கைமகன், கலைக்கோட்டு முடியோன், வீரகச்சாமணி, முடியரசன், கபாலி வீரன், சேதுபதி, இளஞ்சிங்க மாப்பாணன் என்போரும் பெருமைமிக்க ஆரிய வம்சத்தாரும் யாழ்ப்பாணம் வந்தார்கள். இவர்களிலே திடவீரசிங்கன் கரிக்கட்டு மூலைப்பற்றுக்கு அதிபதியானான். இளஞ்சிங்க மாப்பாணன், இராசசிங்க மாப்பாணன், நல்லவாகுமெய்த்தேவன், கருத்தவாகு, சிங்கமாப்பாணன், என்போர் சான்றாரையும் வலையரையும் துரத்திவிட்டு முள்ளியவளையைக் கைப்பற்றினார்கள். நீலையினான் திசையாண்டாரும் படையும் மேல் பற்றுக்கு வந்த சகரன், மகரன் என்ற வேட்டுவத் தலைவர்களைக் கொன்று விட்டு நாட்டை ஆண்டனர். மேற்குமூலை, கிழக்குமூலை என்பனவற்றைக் கைப்பற்றிய சிங்கவாகு பொக்கா வன்னியிலிருந்தான். கபதிட்டத என்னும் அந்தணனும் படையும் திரியாய் எனுமிடத்திற்கு சென்று நீலப்பணிக்கனைக் கொன்று விட்டு அந்நிலத்தை ஆண்டனர். காலிங்கன், மலையகத்தார், கன்னார் முதலியோர் கச்சாயில் குடியிருந்தார்கள். அங்கசன் கூட்டுக்குளத்திற்கு சென்று வாழ்ந்தான். புகழ் மிக்க சிங்கவாகு திருகோணமலைக்குச் சென்றான். மைடன் என்போக் கொட்டியாரத்திற்கு அதிபதியானான். ஒடுக்கன், நீலன், மைலன் என்போர் முறையே துணுக்காய், இந்தியமடு, நெடுங்கேணி எனுமிடங்களுக்கு சென்றனர். ஆற்றல் பொருந்திய சன்மன் நொச்சி முனையில் ஆண்டான். நாகன் புல்வெளிக்குச் செல்ல நிலையினான் .வாகுதேவன் தனிக்கல்லில் இருந்தான். வன்னியர்கள் வந்த பின்னர் அடுத்து அவர்களின் மனைவிமாரும் பரிவாரங்களும் அடங்காப்பற்றை வந்தடைந்தனர். இவ்வாறு வந்தவர்களுள் மழுவீரமழவராயனும் நாட்டையாண்ட மழவராயனும் மன்னனோடு இருந்தார்கள். பூபாலவன்னிமையும் கோபாலரும் கட்டுக்குளத்திலும் திரியாயவிலும் இனிது வாழ்ந்தனர். வல்லவராயன் நல்லூரிலிருந்தான். (பூநகரி நல்லூர்) குடைகாத்தான். கொடித்தேவன், தேவராயன், கந்தவ்னத்தான் என்போர் செட்டிகுளத்தின் அதிபதிகளாயினர். உத்துங்கராயன் பனங்காமத்தில் வாழ்ந்தான்.

வன்னிக்குடியேற்றங்கள் படையெடுப்புக்களின் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகவே தோன்றும்.ஐம்பத்தொன்பது வன்னியரும் பாண்டி நாட்டில் வந்தனரென்று சொல்லப்படுவதால் பாண்டியப் படையெடுப்புக்களின் விளைவுகளுள் ஒன்றே வையாபாடல் கூறும் வன்னிக்குடியேற்றம் எனக்கொள்வது சாலப்பொருத்தம். பிற்காலத்தில் சோழ பாண்டி சேனைகளுடன் இலங்கைக்குப் போர்வீரர்களாக வன்னியர்கள் வந்துள்ளனர். அவர்கள் இலங்கையில் தங்கி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். மன்னார் முதல் திருகோணமலை வரையும் ஆனையிறவு முதல் காட்டுத்தம்புளை வரையுமுள்ள பரந்த பிரதேசத்தின் சிற்றரசர்களாக மாறினர். யாழ்ப்பாணத்து அரசரினதும் சிங்களவரசரினதும் அதிகாரங்கள் குறைந்த காலத்தில் வன்னியர்கள் தமது பகுதிகளில் மேலாதிக்கம் வகித்துள்ளார்கள்.

(தொடரும்)

**-செங்கை ஆழியான்-**

www.padippakam.com
படிப்பகம்